# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 04 | புதன்கிழமை | 11.09.2024 | கதிர் 358







# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை

## பேராயரிடம் சஜித் வாக்குறுதி



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பிரதான சூத்திரதாரிகளுக்கு தராதரம் பார்க்காமல் உரிய தண்டனை நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சிதிடம் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா இன்று உறுதி அளித்திருக்கின்றார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று இன்று காலை கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலை நாட்டப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

6➤



## பொது வேட்பாளரின் அம்பாறை விஜயத்தில் பொலிஸ் இடையூறு

(வி.ரி. சகாதேவராஜா)

ஜனாதிபதிதமிழ்பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனின் அம்பாறை விஜயத்தின் போது பொலிசார் இடையூறு விளைவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது

கல்முனைபெரியநீலாவணையில் தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஆலயம் சென்று வந்ததும் பொலிசார் இடையூறு விளைவித்தனர்.

பொலிசார் வந்து தேர்தல் பிரச்சாரத்தின் போது சின்னம் பதித்த ரீசேட் கொடிகளை தாங்கினால் கைது செய்வோம் என்றனர்.

அத் தருணம் அங்கு இரு சாராருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. விசேட அதிரடிப் படையினரும் நின்றனர்.

அங்குநின்றகாரைதீவுமுன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறுகையில் -

“சிங்கள பேரினவாதம் என்றும் சிறுபான்மையினரின்

6➤

## லசந்த, தாஜுதீனை கொன்றோர் சுதந்திரமாக நடமாடுகிறார்கள்

### சி.ஐ.டி.யின் முன்னாள் தலைவர்

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவையும் வாசிம் தாஜுதீனையும் கொலை செய்தவர்கள்சமூகத்தில்சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்று சி.ஐ.டி.யின் முன்னாள் தலைவர் ரவி செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இருவரும் அரசியல் நோக்கங்களிற்காக கொலை செய்யப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் தேசிய மக்கள் சக்தியின் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வாசிம்தாஜுதீன் படுகொலை விசாரணைகளை அவ்வேளை ஆட்சியிலிருந்தவர்கள் தடுத்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் அந்த கொலை குறித்து உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவ்வேளை ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லைஎன அவர் தெரிவித்துள்ளார்.

## சஜித் மனைவிக்கு இராணுவ மரியாதை? சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள காணொளி





ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் மனைவி, ஜலனி பிரேமதாச யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள நிலையில், பலாலி விமான நிலையத்தில் அவருக்கு இராணுவ மரியாதை வழங்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய இராணுவ மரியாதை செலுத்தும் முறைக்கமைய, துப்பாக்கி செங்குத்தாக உடலுக்கு ஏற்ப உயர்த்தப்பட்டு பொதுவாக தலைவர்கள்மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுகின்றது.

எனினும், இந்த இரு பிரிவிலும் உள்ளடங்காத

6➤

## பொது வேட்பாளர் அரியத்துக்கு தமிழ் நாட்டிலிருந்து ஆதரவு



எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், வடக்கு கிழக்கு பகுதியை பிரதிநிதித்துப்படுத்தி போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழகத்தில் இருந்து ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்துார் தா.செ.மணி அறிக்கை ஒன்றை வெளியிட்டு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் வருகிற செப்டமர் 21ஆம் நாள் நடக்கவுள்ள குடியரசு தலைவருக்கான தேர்தலில் தமிழ் மக்களின் விடுதலை, நீதிக்கான கோரிக்கைகளின் குறியீடாக பொது வேட்பாளர் ஒருவரைப் போட்டியிடுகின்றார். இதன்மூலம் உலகத்திற்கு தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பையும் விருப்பையும் அறிவிப்பது என்ற நோக்கில் அங்குள்ள விடுதலை ஆற்றல்கள் முன்முயற்சி எடுத்துள்ளன.

இதன் பொருட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடுகிறார். தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அறைகூவலாக விடுக்கின்றேன்.

6➤

# சஜித், அநுராவின் எதிர்காலம் அல்ல பிள்ளைகளின் எதிர்காலம் முக்கியம்

## கிளிநொச்சி பிரசாரத்தில் ரணில்



சஜித்தின் அல்லது அநுரவின் எதிர்காலத்தை அல்ல, தமது மற்றும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து இந்த நாட்டு மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி எரிவாயு சிலிண்டருக்காக வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், அண்மைய பொருளாதார வீழ்ச்சியை அடுத்து மக்கள் படும் துன்பத்தைப் போக்க சஜித்தோ அல்லது அனுரவோ முன்வரவில்லை.

உலகெங்கிலும் உள்ள அரச தலைவர்களை சந்தித்து உரம், எரிபொருள் கேட்ட போது சஜித்துக்கும் அநுரவுக்கும் தேர்தல் நடத்துமாறு கோரியதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, மக்களின் வலிக்கு மத்தியில் தேர்தல் நடத்துமாறு கோரியும் வேலைநிறுத்தம் நடத்தியும் நாட்டை சீர்குலைக்க முயன்ற தலைவர்களை நம்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

எனவே சிரமப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தி அபிவிருத்தியடைந்த நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் கைகோர்க்க வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கஷ்டங்களில் இருந்து மீண்டு மக்கள் சுமூகமாக வாழ வழி செய்ய வேண்டுமென கருதியே ஆட்சியை ஏற்றுக்கொண்டேன். அனுரவோ சஜித்தோ அரசாங்கத்தை ஏற்க முன்வரவில்லை. மக்களின் வயிற்றுப்பசியை போக்கவோ, தட்டுப்பாடுகளை நிவர்த்திக்கவோ, பிள்ளைகளின்கல்வியை உறுதிப்படுத்தவோ அவர்கள் முன்வரவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

# வெற்றியாளர் யாரென சிந்தித்து தீர்மானித்து வாக்களியுங்கள்

## மக்களிடம் சஜித் கோரிக்கை



"தற்போது நாட்டு மக்களுக்குத் தெளிவான தீர்மானம் ஒன்று இருக்கும். ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸ ாநாயக்க ஜோடிக்குப் புள்ளடி இடுவதா அல்லது இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்வதா என்று தீர்மானிக்க வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 44 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் குளியாபிட்டி நகரில் முன்னெடுக்கப்பட்டது. இதில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்து, மக்களின் வாழ்க்கை வீழ்ச்சியடைந்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படாத ஒரு யுகத்தில் இருக்கின்றோம். குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் மந்த போசனை அதிகரிக்கின்ற இந்த யுகத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, விருத்தியடையச்செய்வதற்கான யுகத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

இந்த இளைஞர் சமூகத்துக்காக பத்து இலட்சம் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதோடு, வறுமையைப் போக்குகின்ற நோக்கில் மாதம் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா விதம் 24 மாதங்களுக்கான நிவாரணத்தை வழங்குவோம்." - என்றார்.

# நல்லூர் திருவிழாவுக்கு சென்றோர் கவனத்துக்கு..

*நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின்போது பக்தர்களால் தவறவிடப்பட்ட, இன்னமும் உரிமை கோரப்படாத பொருட்கள் யாழ். மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

*கை சங்கிலி – 1, மோதிரம் –1, பணப்பைகள் – 9, கைக்கடிகாரங்கள் – 18, தேசிய அடையாள அட்டைகள் – 4, சாரதி அனுமதிப்பத்திரம் – 4, வங்கி அட்டைகள் – 4, திறப்புகள் – 39 ஆகிய பொருட்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டன.*

*இவற்றை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களை காட்டி மாநகர சபை நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் இன்று புதன்கிழமை தொடக்கம் அக்டோபர் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.*



# பொது வேட்பாளருக்கு ஆதரவாக வடமராட்சியில் நேற்று பிரசாரம்

தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேந்திரனை ஆதரித்து யாழ்.வடமராட்சியில் நேற்று மாலை பிரசாரக் கூட்டம் இடம்பெற்றது.

வடமராட்சி, மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் வைத்தியர் சி.சிவகுமார் தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் விந்தன் கனகரட்ணம், அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகவல் விஞ்ஞான கருத்தரங்கு

வடபுலத்தின் உயர் கல்வியின் மகுடமாக திகழ்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவ்வருடம் தனது 50 வருட நிறைவினைக் கொண்டாடுகிறது.

இலங்கையின் வடபுலத்தில் குறிப்பாக தமிழ் மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் உயர்கல்வி நிறுவனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இப்பொன்விழா ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தால் “அறிவு வலுவூட்டல்: உயர்ச்சியின் உந்துசக்திகளாக நூலகங்கள்” எனும் தலைப்பிலான நூலக தகவல் விஞ்ஞான கருத்தரங்கானது இம்மாதம் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கானது வித்தியானந்தன் நூலகத்தால் நடாத்தப்படுகின்ற “ஏடகம்” அறிவுப்பகிர்வு மாநாட்டின் தொடர்ச்சியாகும். இத்தருணத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகிய மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் 100வது பிறந்த தினத்தையும் நினைவு கூறுவது இம்மாநாட்டின் சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டின் ஒரு அங்கமான இக்கருத்தரங்கின் முதன்மை உரையினை சென்னையிலுள்ள ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தின் பணிப்பாளர் கலாநிதி. சுந்தர் கணேசன் “தெற்காசியாவின் அறிவு வளங்களை ஆவணமாக்கல்“ என்ற தலைப்பில் நிகழ்த்தவுள்ளதுடன், 20இற்கு மேற்பட்ட ஆய்வாளர்களின் நூலகம் மற்றும் ஆவணவாக்கம் சார் செயற்றிட்டங்கள் நான்கு இருக்கைகளில் சமர்ப்பிக்கப் படவுள்ளன. அத்துடன், உள்ளூர் புத்தக விற்பனையாளர்களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வாக நடைபெறவுள்ள “சமூக மேம்பாட்டிற்கான நூலகங்கள்“ என்ற மையக்கருவினை அடிப்படையாகக்கொண்ட பல்துறைசார் அறிஞர்களின் கருத்தாடல்கள் பேராதனை பல்கலைக்கழக நூலகர் கலாநிதி. ஆர்.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற உள்ளது. இதில் நூலகவியலாளர் என். செல்வராஜா, திருமதி. துஷாரி செனிவிரட்ன (சிரேஷ்ட உதவி நுலகர், மொரட்டுவ பல்கலைக்கழகம்), திரு. என்.ரவிக்குமார் (சிரேஷ்ட உதவி நுலகர், கிழக்கு பல்கலைக்கழகம்), கலாநிதி. வி.விஜயபாஸ்கர் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோர் தமது சிறப்புரைகளை வழங்கவுள்ளனர். வடமாகாணத்தின் நூலகவியல் துறைசார் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், பணியாளர்களின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கு நூலகவியல் துறை சார்ந்து புதிய உத்வேகத்தினை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இத்துறை சார்ந்த ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், அறிஞர் பெருமக்களை இக்கருத்தரங்குக்கு அன்புடன் வரவேற்கின்றோம்.






# மிதி வெடி

தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அறிவிக்கப்பட்டுது பரபரப்புக்குப் பஞ்சமில்லாமல் போட்டுது பாருங்கோ..... வழக்கமா தேர்தல் எண்டா அடி, தடியும் வன்முறையுமாத் தான் இருக்கும். என்னவோ தெரியேல்ல இந்த முறை அப்பட்டமா எந்த அடி தடியும் இந்த முறை பதிவாக்கேல்ல பாருங்கோ....

தேர்தலில கக்கிற பிரதானமான ஆள் “நரி”யர் தானே? சத்தம், சலார் இல்லாமல் அலுவலக் கொண்டு போற ஆள். பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுற வேலையைக் கச்சிமாச் செய்வார். அதால கமுக்கமாக் காரியத்தைக் கொண்டு போறார் போல.....

நாங்கள் “சங்கு தான் ஊதுவம்” எண்டு அளப்பரை பண்ணின சாவகச்சேரி கோஷ்டி அங்க இருந்து அந்தர் “பல்டி” அடிச்சு “ரெலிபோன்” மணி ஒலிக்க வேணும் எண்டு சொல்லிக் கொண்டு போய் நிண்டு “போட்டோ”வும் எடுத்துப் போட்டிச்சினம். இதில வேடிக்கை என்னவெண்டா.... சங்கு... சங்கு எண்டு ஊதிக் கொண்டு திரிஞ்சவை திடீரெண்டு கட்சி சஜித்துக்கு ஆதரவு தெரிவிக்கிறதுக்கு முதல் நாள் தாங்கள் இரகசியமாக - கட்சிக்குத் தெரியாமல் போய் சஜித்தோட கதைச்ச படத்தை வெளியிட்டு, கட்சி முடிவெடுத்ததே தாங்கள் போய்க் கதைச்சதால தான் எண்டு செய்தியைக் கசிய விட்டிச்சினம்.... நானும் சந்தோசப்பட்டன்... சிறு பிள்ளை வேளாண்மை விளைஞ்சும் வீடு வந்து சேராது எண்டது அந்தக் காலம்... இப்ப பாருங்கோவன் சின்னஞ் சிறுசுகள் கூடிக் கதைச்சு, போய் சந்திச்சதால பழம்பெரும் கட்சியே முடிவெடுக்கிற அளவுக்கு வந்திருக்கெண்டு....

ஆனா... அப்பிடி இல்லையாம் பாருங்கோ.... உங்களுக்கும் பெப்பே... உங்கப்பனுக்கும் பேப்பே... எண்டு போன “எலக்‌ஷன்” காலத்தில இருந்து அப்பரைப் பிழையா வழிநடத்தின அதே “க(ல்)லாநிதி தான் இப்ப பிள்ளையையும் கிள்ளி விட்டுக் கொண்டிருக்குதாம்.... சங்கெண்டு ஒரு பக்கம் கூவிக்கொண்டு, மறு பக்கத்தால “ரெலிபோஃனில” பேசுற தம்பிறை இப்ப “காஸ் குக்கர்” ல இரகசியமாச் சமைப்பம் எண்டு வெளிக்கிட்டிருக்கினமாம்.... வீட்டில மகளோட கோவம் : மாமியோட நேசம்..

எனக்கொண்டு தான் விளங்கேல்ல... மக்கள வழிநடத்திறம் பேர்வழிகள் எண்டு வெளிகிட்ட இந்தப் பிரகிருதிகள் எல்லாம்... ரோட்டில போகேக்க சங்குக்கு “நோட்டீஸ்” குடுககினம்... வீட்டுக்குள்ள வந்து நிண்டு “காஸ் குக்கர்” ல தான் சமைக்கோணும் எண்டினம், வெளியால கதைக்கேக்க கட்சித் தீர்மானம்... கதைக்கிறதுக்கு “ரெலிபோன்” வேணும் எண்டு கினம்.... உங்களுக்குள்ளயே தெளிவா ஒரு முடிவில்ல... இதில நீங்கள் சொல்லுறதை நாங்கள் (மக்கள்) எப்பிடிப் பாருங்கோ கேக்கிறது.

சரி, இதுகள் தான் அப்பிடித் தலைகீழாப் போய் நிக்குதுகள் எண்டு பார்த்தால் அறிவு(புத்தி)ஜீவிகள் ஆராவது வழிகாட்டுவினம் எண்டு பாத்தா, அவையள் இவைய வெண்டவையா நிக்கினம்.... எல்லாரும் தங்கள் தங்கள் சுய சம்பாத்தியத்தில கவனமா இருக்கினம் பாருங்கோ.... அண்டைக்கு வீரசிங்கம் மண்டபத்தில ஜே.வி.பி யின்ர கூட்டத்தில முனவரிசையில இருந்து கொண்டு “மீடியாக்”காரரர் படமெடுக்கேக்க கையால முகத்தை மறைச்ச பெரிய ஆசிரியர்கள் எல்லாம், சுமந்திரனுக்கு முன்னால தனியார் விடுதியில போய் நிண்டு ராப்போசனம் எடுக்கினம்.... அது போதாதெண்டு... தியேட்ரில போய் வீணை வாசிக்கிறதுக்கு “அப்பொயின்ற்மென்ற்” எடுத்திட்டுக் காத்திருக்கினம். ஆக மொத்தத்தில சனத்துக்குச் சரியானதைச் சொல்லுற நிலைமையில கட்சியளுமில்லை.... கற்றறிந்தவர்களுமில்லை.....

எல்லாற்றை இந்தப் பல முக விளையாட்டுகளால திக்குத் தெரியாமல் நிக்கிற ஆக்கள் திசைகாட்டியைத் தான் பாவிக்க வேணும் போல கிடக்கு... ஆனா நான் ஒண்டை மட்டும் சொல்லுறன்.... வாக்கு - என்னுடைய ஆயுதம் : வாக்கு என் உரிமை. அதை நான் சரியாத் தான் போடுவன். காலங்காலமா விட்ட பிழைய இனியும் விடன் பாருங்கோ.... இந்தமுறை நான் சுயமாச் சிந்திச்சுத் தான் முடிவெடுக்கப் போறன்... அப்ப நீங்கள்...?

நரமுனி




# மயன்மார் உள்நாட்டுப் போர் மாறுமா இந்திய நிலைப்பாடு?

மு.இராமனாதன்

இந்தியா தனது எல்லையை ஏழு நாடுகளோடு பகிர்ந்து கொள்கிறது. வடக்கே சீனா, பூடான், நேபாளம் வடமேற்கே ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் கிழக்கே வங்கதேசம், மயன்மார். இவை தவிர கடல் எல்லையைத் தாண்டி, தெற்கே இலங்கையும் மாலைதீவும். இந்த ஒன்பது நாடுகளிலும் ஆகக் குறைந்த ஊடக கவனம் பெறுவது மயன்மார். இவ்வளவுக்கும் ஒரு காலத்தில் இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த நாடு அது. அந்நாளில் அதன் பெயர் பர்மா. இன்றும் தமிழகத்தின் பல ஊர்களில் ‘பர்மா காலனிகள்’ இருக்கின்றன. இப்போதும் சுமார் 10 லட்சம் தமிழர்கள் மயன்மாரில் வாழ்கின்றனர்.

அங்கே மூன்றாண்டுகளுக்கும் மேலாக இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இதுகாறும் 5,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் சுமார் 25 லட்சம் பேர் இடம்பெயர்ந்திருக்கின்றனர். என்றாலும் மயன்மார் மக்களின் துயரம் பல இந்திய ஊடகங்களிலோ அல்லது சர்வதேச ஊடகங்களிலோ பேசுபொருளாக இல்லை. ஊடகங்கள் மயன்மாருக்கு வழங்கும் முக்கியத்துவமும் குறைவு.

மயன்மாரில் இராணுவ ஆட்சி நடைபெறுவதில் எந்தப் புதுமையும் இல்லை. ஆனால், இராணுவ ஆட்சிக்கு எதிராக இப்போது உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அது புதிது. அதுவே கரிசனம் மிக்க ஓர் அண்டை நாடாக இந்தியாவின் கவனத்தைக் கோருகிறது. அது ஒரு வரலாற்றுத் தேவையாகவும் மாறிவருகிறது. மயன்மார் இராணுவம், தனது அரை நூற்றாண்டு கால ஆட்சியை 2012இல் சற்றே இளக்கியது. பல காலம் சிறையிலிருந்த தலைவர் அவுங் சான் சுகி விடுதலையானார். அவரது தலைமையிலான என்.எல்.டி. எதிர்க்கட்சி ஆனது. 2015இல் அதுவே ஆளுங்கட்சியும் ஆனது.

என்றாலும் இராணுவத்தின் மேலாதிக்கம் தொடர்ந்தது. என்.எல்.டி.யும் இராணுவத்துக்கு இசைவாகத்தான் ஆட்சி நடத்தியது. வெகுமக்களின் ஒரே பற்றுக்கோடாக இருந்த என்.எல்.டி, 2020 தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றது. மக்களிடம் என்.எல்.டி.க்கு இருந்த செல்வாக்கு இராணுவத்துக்கு உவப்பாக இல்லை. ஆகவே, அது பிப்ரவரி 2021இல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

இராணுவ ஆட்சிக்குப் பழக்கமான மயன்மார் மக்களை அடக்கி ஆண்டு விடலாம் என்று இராணுவம் கருதியது. ஆனால், அந்தக் கணக்கு பிசகிவிட்டது. பத்தாண்டுகளுக்கும் மேலாக மயன்மாரில் வீசிய அரசியல் - பொருளாதாரச் சுதந்திரக் காற்றை, அது எவ்வளவு குறைவாக இருந்தாலும், இழப்பதற்கு மக்கள் சித்தமாக இல்லை. அவர்கள் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். தோட்டாக்களையும் தடிகளையும் ஏவியது அரசு. மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் ஆட்சியாளர்களிடம் எந்தச் சலனத்தையும் உண்டாக்கவில்லை.

இந்தச் சூழலில்தான் ஒரு புதிய கூட்டணி உருவானது. மயன்மார் பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. ‘பாமா’ எனப்படும் பெரும்பான்மை பர்மிய சமூகத்தினர் ஐராவதி நதி பாயும் வளமான மையப் பகுதிகளிலும் தென் பகுதிகளிலும் வசிக்கிறார்கள். இவர்கள் பௌத்த மதத்தினர். மயன்மாரில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுபான்மை தேசிய இனத்தவர் உள்ளனர். இவர்களில் ஷான், கரீன், ரக்கைன், சின், கச்சின், கைன், மான் ஆகிய ஏழு பிரிவினர் முதன்மையானவர்கள்.

இவர்களில் பிரிவினை கோரும் பல ஆயுதக் குழுக்களும் உண்டு. தேர்தல் ஜனநாயகத்தைப் பின்பற்றும் கட்சிகளும் உண்டு. பெரும்பான்மை பாமா இனத்தவருக்கும் சிறுபான்மை இனத்தவருக்கும் எப்போதும் இணக்கம் இருந்ததில்லை. எனில், இப்போது முதல் முறையாகப் பொது எதிரியான இராணுவ ஆட்சிக்கு எதிராக இரு சாராரின் அமைப்புகளும் இணைந்திருக்கின்றன. இந்தக் கூட்டணிதான் தேசிய ஐக்கிய முன்னணி (**National United Government-NUG**). இது மயன்மாருக்கு வெளியே ஓர் அரசாங்கத்தையும் நிறுவியிருக்கிறது. இதன் பல்வேறு விடுதலைப் படைகள் கூட்டாக மக்கள் பாதுகாப்புப் படை ரேுழிடந'ள னுநகநளெந குழசஉநள-ேனுகு) என்று அறியப்படுகிறது.

பி.டி.எஃப்-இன் அங்கமான சிறுபான்மை இனத்தவரின் மூன்று விடுதலைக் குழுக்கள் ஒன்றிணைந்து 2023 அக்டோபர் 27 அன்று அரசப் படைகளை எதிர்கொண்டன. வெற்றியும் பெற்றன. பல இராணுவத் தளங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றின. இந்தத் ‘தாக்குதல் 1027’ உள்நாட்டுப் போரின் போக்கையே மாற்றிவிட்டது. தொடர்ந்து சிறுபான்மையினர் வசிக்கும் எல்லைப்புற மாநிலங்களில் வெற்றி ஈட்டிய பி.டி.எஃப், இப்போது மையப் பகுதிகளிலும் முன்னேறி வருகிறது. சமீபத்தியத் தரவுகளின்படி நாட்டின் 60% நிலப்பரப்பை பி.டி.எஃப். கைப்பற்றியிருக்கிறது. இதன் பொருள் இராணுவ ஆட்சி விரைவில் முடிவுக்கு வந்துவிடும் என்பதல்ல. இப்போதும் அரசப் படைகளுக்குத்தான் ஆயுத பலம் அதிகம். அதன் விமானப் படையும் வலியது. இராணுவத்துக்குக் கட்டாயமாக ஆளெடுப்பும் நடக்கிறது. கூடவே இந்தியா, சீனா போன்ற நாடுகள் மயன்மார் அரசுக்குத் தாராளமாக ஆயுதங்களை வழங்கிவருகின்றன. சொந்த நாட்டின் மக்களைக் கொல்லவே இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மயன்மார் அரசோடு இந்தியாவுக்கு நல்லுறவு இருக்கிறது. ஆனால், மக்களின் ஆதரவை இழந்துவரும் ஆட்சியாளர்களோடு மட்டும் உறவைப் பேணுவது, ஆட்சி மாற்றம் ஏற்படும்போது எதிர் விளைவுகளை உண்டாக்கும். சமீபத்திய எடுத்துக்காட்டுகள் மாலைதீவும் வங்கதேசமும். இதேபோன்ற பாதப்பை மயன்மாரிலும் இந்தியா எதிர்கொள்ளலாம்.

நவம்பர் 2023இல் மாலத்தீவில் தேர்தல் நடந்தது. இந்தியாவோடு இணக்கமாக இருந்த இப்ராகிம் சோலி தோல்வியடைந்தார். இந்தியாவுக்கு எதிராகப் பரப்புரை மேற்கொண்ட முகமது முய்சு மூன்றில் இரண்டு பங்கு இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றார். உடன், மாலைதீவில் நிறுத்தப்பட்டிருந்த இந்தியத் துருப்புகள் வெளியேறுவதற்குக் கெடு விதித்தார். அவரது அமைச்சர்கள் இந்தியாவுக்கு எதிராகப் பேசினர். இப்போது இந்திய அரசின் வெளியுறவுத் துறை நிலைமையைச் சீராக்கப் பெருமுயற்சி எடுத்துவருகிறது.

போலவே, வங்கதேசத்தில் ஷேக் ஹசீனாவை ஆதரித்தது இந்திய அரசு. அவரது எதேச்சதிகாரம் இந்தியா வழங்கிவந்த ஆதரவுக்குத் தடையாக இல்லை. இப்போது ஹசீனா பதவி இழந்துவிட்டார். வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைந்திருக்கிறது. அதில் பொறுப்பு வகிக்கும் சிலரே இந்தியாக்கு எதிராகப் பேசுகிறார்கள். இனி, புதிய ஆட்சியாளர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள இந்தியா மெனக்கெட வேண்டும். அதாவது, மாலைதீவிலும் வங்கதேசத்திலும் செல்வாக்கை இழந்துகொண்டிருந்த ஆளும்வர்க்கத்துடன் இந்திய அரசு நெருக்கமான உறவைப் பேணியது. அதே வேளையில், பிற கட்சிகளுடனும் இயக்கங்களுடனும் உறவை வளர்த்துக்கொள்ளவில்லை. இதனால், ஆளும் கட்சி மாறியவுடன் அதற்கு எதிரான மனப்போக்கு, இந்தியாவுக்கு எதிரான மனப்போக்காக மாறுகிறது. இதே சிக்கல் வருங்காலத்தில் மயன்மாரிலும் வரலாம். அதை எப்படித் தவிர்க்கலாம்?

முதலாவதாக, மயன்மாரின் இராணுவ அரசுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தலாம்.

அடுத்து, இந்த உள்நாட்டுப் போரில் பாதிக்கப்படுவோர் அண்டை மாநிலங்களான மணிப்பூருக்கும் மிசோரமுக்கும் தஞ்சம் நாடி வருகிறார்கள். இந்த அகதிகளிடத்தில் இந்திய அரசு கரிசனத்துடன் நடந்துகொள்ளலாம். இவை இரண்டும் இந்தியாவின் தார்மிக மதிப்பை உயர்த்தும்.

மூன்றாவதாக, என்.யூ.ஜி. அமைப்புடன் இந்தியா தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த விஷயத்தில் சீனா கவனமாக இருக்கிறது. மயன்மாரின் இராணுவ ஆட்சிக்குப் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளையும் இராணுவத் தளவாடங்களையும் சீனா வாரி வழங்கியிருக்கிறது. அதே வேளையில், என்.யூ.ஜி.யுடனும் தொடர்பில் இருக்கிறது. சமீபத்தில் ஒரு தற்காலிகப் போர் நிறுத்தத்துக்காக இரண்டு தரப்புகளுக்கும் இடையே சீனாதான் பேச்சுவார்த்தை நடத்தியது. வருங்காலத்தில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால் புதிய ஆட்சியாளர்களுடன் இணங்கிப்போவது சீனாவுக்கு எளிதாக இருக்கும். இந்தியாவுக்குக் கடினமாக இருக்கும்.

நான்காவதாக, சீனாவால் செய்ய முடியாத ஒன்றை இந்தியாவால் செய்ய முடியும். தற்போதைய மயன்மார் அரசமைப்பில் பெரும்பான்மை பாமா இனத்தவரிடம்தான் அதிகாரம் குவிந்திருக்கிறது. என்.யூ.ஜி. ஆட்சிக்கு வந்தால் எல்லாச் சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டிவரும். கூட்டாட்சித் தத்துவத்தை அரசமைப்பின் ஆதாரக் கூறுகளில் ஒன்றாகக் கொண்டிருக்கும் இந்தியாவால், புதிய மயன்மாருக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க முடியும்.

இந்த நான்கு கட்டளைகளை இந்திய அரசு பரிசீலித்து, அவற்றைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தினால், இந்தியாவின் மதிப்பு மயன்மார் மக்களிடத்தில் மட்டுமல்ல, பிற அண்டை நாடுகளிடத்திலும் உயரும். பன்னாட்டளவிலும் இந்தியா கவனம் பெறும். இவை ராஜீயரீதியிலும் பயன் தரும் அறம் சார்ந்த நடவடிக்கைகளாகவும் அமையும். (தி இந்து)

# பொது வேட்பாளர் நிறுத்தம் எமது உரிமைகளுக்கானது

## முன்னாள் தவிசாளர் நிரோஸ்



தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து நேற்று மாலை வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும், தமிழ்த் தேசியம் இன்று பலவாறாக அகத் துண்டாலுக்கு உட்பட்டு வருகின்றது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளியுலகிற்கும் ஆட்சியில் அமர்பவர்களுடன் பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான நிலைமைகளை பலமிழக்கச் செய்து விடுமோ என்ற நியாயபூர்வமான அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. அவ் அச்சத்தில் நியாயபூர்வமான யதார்த்தம் உள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனமான நாம் எமது அரசியல் அபிலாசைகளை சாதாரண ஜனநாயக உரிமைகளுடன் மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தளவு தூரம் ஆட்சியில் அமரக்கூடிய ஒருவருக்கு ஆதரவு அளிக்கலாம் என்று சிலர் அல்லும் பகலும் அறைபோட்டு சிந்திக்கின்றனர். செயற்படுகின்றனர். அவர்கள் இந்த நாட்டில் வெல்லக்கூடிய ஒருவரை தேடிப்பிடித்து சலுகைகளைப் பெற்று பெற்று சகித்து வாழுவோம் என்ற என்ற மனநிலையில் இனத்தினை அடமானம் வைக்கின்றனர். நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாழ்கின்றனர் என்பதற்காக எண்ணிக்கையில் குறைந்த அளவுடைய நாட்டின் தேசிய இனமான தமிழ் இனம் இன உரிமைகளை விற்று வாழ முடியாது. சிங்கள பேரினவாதிகளுக்கு நோகக்கூடாது என்று வாழ்பவர்கள் எம்மிடத்தில் அதிகரித்துவிட்டனர். முக்களின் இட்சியத்தினையும் தியாகத்தினையும் விற்றுப்பிழைப்பதில் முன்டியடிக்கின்றனர்.

மண்ணுக்காக எத்தனையோ தியாகங்களை எம் இனம் மேற்கொண்டிருக்கின்றது. ஆடிப்படையில், எமது மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியும் எமக்கு சமஸ்டி அடிப்படையிலான உலகம் ஏற்றுக் கொண்ட அரசியல் தீர்வினை முன்வைக்கக் கோரியும் நாம் பொது வேட்பாளரை முன்நிறுத்திச் செயற்படுவது நியாயபூர்வமாகச் சிந்திக்கும் எந்தவொரு சிங்களப் பிரஜைக்கும் எதிரான வேலைத்திட்டம் கிடையாது. சிங்கள முற்போக்கு சக்திகளும் சொந்த தாய் நாட்டில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் தமிழ் மக்களின் கருத்து வெளிபாட்டு உரிமைக்கும் ஜனநாயக உரிமைக்கும் மதிப்பளித்து வாக்களிக்க முடியும்.

தமிழ் மக்களைப் பொருத்தளவில் எமது அரசியல் அபிலாசைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து தமிழ் பொது வேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கடமையினை நிறைவேற்றுவோம் என ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.



# ரணிலை ஆதரித்து இளைஞர் ஒன்றுகூடல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இரவு சாய்ந்தமருதில் அமைந்துள்ள ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பு காரியாலயத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம்.எம். முஷாரப், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீட், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.றிபாஸ், சமூக செயற்பாட்டாளர் அஸ்வர் சலாம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக கல்முனைத் தொகுதியில் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகளை இளைஞர்களின் பங்களிப்புடன் மேலும் விஸ்தரித்து காத்திரமாக முன்னெடுப்பது குறித்து வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம். ஜாஹிர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பஸ்மீர், ஐ.தே.க. வட்டார அமைப்பாளர்கள், கட்சிப் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளான இளைஞர்கள் பங்கேற்றிருந்தனர்.



## தரம் 5 புலமைப் பரிசில் வகுப்புக்கு இன்று நள்ளிரவு தொடக்கம் தடை

தரம்5புலமைப்பரிசில்பரீட்சைதொடர்பான வழிகாட்டல் வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்துவதற்கு இன்று புதன் கிழமை நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களின் வினாக்களை வழங்குதல் அல்லது அதனை ஒத்த வினாக்களை வழங்குவதாகத்துண்டுப்பிரசுரம் விநியோகித்தல் அல்லது அவற்றை வைத்திருத்தல் என்பனவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவரேனும் ஒருவர், நிறுவனம் அல்லது தரப்பினர் இந்த அறிவுறுத்தலை மீறுவார்களாயின் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தில் முறைபாடு செய்ய முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## துர்க்காதேவி தேவஸ்தான மஹா யாகம்

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹா யாகம் நாளை வியாழக்கிழமை அதிகாலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 8 மணிமுதல் கிரியைகள் ஆரம்பமாகும்.

தென்மராட்சி இந்து அந்தண குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் விசேடகுருமார்கள் இந்த மஹா யாகத்தில் பங்கேற்கவுள்ளனர் .இந்த மஹாயாகத்தில் விஷேட 108 திரவிய ஹோமமும் விஷேட 108 திரவிய அபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

### பொது வேட்பாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இம்முயற்சிக்கு நமது ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று காலை 11 மணி அளவில் ஊடகச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்துள்ளோம் என்றார்.

## பேருந்தில் கசிப்பு! கடத்தியவர் கைது



கிளிநொச்சி தர்மபுரம் பொலஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் பகுதியில் இருந்து பேருந்து ஒன்றில் கசிப்பினை கடத்த முற்பட்ட ஒருவர் தர்மபுர கைது செய்யப்பட்டுள்ளார்.

டதாசி பெட்டியில் பொதி செய்யப்பட்டு தருமபுரம் பஸ் தரிப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்த கசிப்பினை பேருந்தில் ஏற்ற முற்பட்டபோது அவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு செல்ல முற்பட்டபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 28 லிட்டர் கசிப்பும் கசிப்பு கொண்டு செல்வதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அத்ததுடன் சந்தேக நபர், மற்றும் தடையப் பொருட்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுர போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.(113)

### உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்கு தாம் தோள் கொடுப்பதாகவும், நீதிமன்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்காக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயர்த்து ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

### பொது வேட்பாளரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரிமையை நசுக்கி கொண்டு தான் இருக்கிறது, தென்னிலங்கை பெரும்பான்மையின வேட்பாளர்களின் பொதுக் கூட்டங்களில், வாகன தொடரணியில், பிரச்சார நடைபவனியில் தடுக்கப்படாத ளவஉைடமநச, வ-ளாசைவ, கொடிகள் தமிழ்ப் பொது வேட்பாளரின் கூட்டத்தில் மட்டும் தடுக்கப்படுவது ஏன்?

இலங்கை நாட்டில் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்களவருக்கு ஒரு சட்டமா?

இதனால் தான் நாம் எமது அரசியல் உரிமைக்காக இந்த தேர்தலில் போட்டியிடுகின்றோம்" என்றார். சற்று நேரத்தில் இரு சாராரும் கலைந்து சென்றனர்.

### சஜித் மனைவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜலனி பிரேமாசவிற்கு இராணுவ மரியாதை வழங்கியுள்ளமை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், ஜலனி பிரேமாசவுடன் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ்'க்காகவே இந்த இராணுவ மரியாதை நிகழ்த்தப்பட்டதாகவும் வேறு எந்த நபருக்கும் அல்ல என விமானப்படையின் பேச்சாளர் குஷரூப் கெப்டன் எரந்த கீகனகே தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த குழுவிற்கு ஜலனி பிரேமதாச தலைமை தாங்கினார் என்பதும் அவருக்குப் பின்னால் ஜி.எல். பீரிஸ் நடந்து செல்வதைக் காண முடிந்துள்ளது.

மேலும், பின்னர் பலாலி முகாமில் பிரதம அதிதியாக ஜலனி பிரேமதாச கலந்து கொண்டதுடன், சால்வை போர்த்தப்பட்டு வரவேற்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# பார்வை இழப்பைத் தடுக்கும் மாங்கனி



டாக்டர் இ.சுப்பராயன்

முக்கனியில் முதல் கனி மா. மாம்பழம் கோடையின் கொடை. உலகின் வெப்ப மண்டலப் பகுதிகளில் மாங்கனியின் உற்பத்தி அதிகம். மாம்பழத்தை அதன் சுவைக்கு மட்டுமே நாம் பிரதானப்படுத்துகிறோம். சுவையைத் தாண்டி மாம்பழத்தில் ஏராளமான சத்துகள் நிறைந்திருப்பது நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

200 கிராம் எடை கொண்ட ஒரு மாங்கனியில் 150 கிலோ கலோரியும் 28 கிராம் மாவுச்சத்தும் உள்ளன. புரதச்சத்து இதில் அரிதாகக் காணப்படுகிறது. கொழுப்புச் சத்து மாங்கனியில் இல்லை.

இவை தவிர்த்து நார்ச்சத்து 3 கிராம், பொட்டாசியம் 300 மி.கி, விட்டமின் சி 60 மி.கி என்கிற அளவில் மாங்கனியில் உள்ளன. மேலும், இக்கனியில் விட்டமின் ஏ, பி, இ, கே போன்ற உயிர்ச்சத்துகள் உள்ளன. பீட்டா கரோட்டின், ஃபோலேட், லூட்டின், **(Lutien)** ஜீயாக்சாந்தின் **(Zeaxanthne)**, மாஞ்சிஃபெரின் **(Mangiferin)** போன்ற ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் ஏராளமாக உள்ளன.

கனிமச் சத்துகளான இரும்புச் சத்து, காப்பர், மக்னீசியம் இப்பழத்தின் சிறப்பாகும். மாம்பழத்தில் உள்ள சத்துகள் ஆக்ஸிஜன் ஏற்றியாகச் செயல் புரிந்து பார்வைத் திறனைச் சிறப்பாகப் பராமரிக்கும் தன்மை கொண்டவை.

25 கிராம் மாம்பழம் உணவாகும் பட்சத்தில், 5 கிராம் குளுக்கோஸ் உடல் பயன்பாட்டிற்கு ரத்தத்திலும் 20 கிராம் கல்லீரலிலும் சேமிக்கப்படும். இதில் மாம்பழத்தில் உள்ள ஒட்டுமொத்த சீனிச்சத்தும் ரத்தத்தில் சேர்வதில்லை. இதன் காரணமாகச் சீனியின் அளவு ரத்தத்தில் உயராது.

அந்த வகையில் நீரிழிவு நோய் இருந்து, அதற்கான சிகிச்சை (மாத்திரை, இன்சுலின் ஊசி) எடுத்துக் கொள்பவராக இருந்தால் 25 கிராம் அளவு மாம்பழத்தைச் சாப்பிடலாம். அதில் ஆபத்தில்லை.

ஓர் உணவுப் பொருளானது ரத்தத்தில் குளுக்கோஸ் அளவை எந்த அளவிற்கு உயர்த்துகிறதோ அதை வைத்துத்தான் உணவின் ‘குளுக்கோஸ் உயர்த்துதல் குறியீடு’ **(Glycemic Index)** கணக்கிடப்படுகிறது. இதன் அடிப்படையில் உணவு வகைகள் மிகக் குறைவான, மிதமான, மிக வேகமான சர்க்கரைஉயர்த்துதல் குறியீடுகள் என மூன்று விதமாகத் தரம் பிரிக்கப்படுகின்றன.

இந்தத் தர அளவுகோலின் படி 0 முதல் 100 என்று பிரிக்கப்பட்டுள்ளது. மாம்பழத்தின் சர்க்கரை உயர்த்துதல் குறியீடு 50 என்றும் வெள்ளை அரிசியின் சக்கரை உயர்த்துதல் குறியீடு 70 என்றும் இருக்கின்றன.

இதுவே வெள்ளை சர்க்கரையின், சக்கரை உயர்த்துதல் குறியீடு 100 என்றும் அளவிடப்பட்டுள்ளது. இவற்றை ஒப்பிடும்போது மாம்பழம், வெள்ளை அரிசியைவிட ஆபத்தற்றது என்பதை நீரிழிவு நோய் உள்ளவர்கள் புரிந்து கொள்ளலாம். எனினும் மாம் பழத்தைச் சாப்பிடுவதில் உரிய கட்டுப்பாட்டுடன் இருத்தல் அவசியம்.

நார்ச்சத்து: செல்லுலோஸ் என்கிற நீரில் கரையா நார்ச்சத்து மாம்பழத்தில் உள்ளது. 200 கிராம் எடை கொண்ட மாங்கனியில் 3 கிராம் நார்ச்சத்து உள்ளது. குடல் நன்றாக இயங்க நார்ச்சத்து மிக அவசியம். குடலில் நன்மை செய்யும் நுண்ணுயிர்களுக்கு உணவாக நார்ச் சத்து இன்றியமையாதது. புற்று நோய், பைல்ஸ் வராமல் தடுக்கவும் மலச்சிக்கலில் இருந்து விடைபெறவும் நார்ச்சத்து உதவுகிறது.

மேலும், மாம்பழத்தில் உள்ள ‘பெக்டின்’ என்கிற நீரில் கரையும் நார்ச்சத்து உடலில் கொழுப்பு மிகுதியாகச் சேரா மல் கண்காணிக்கும். இதய ரத்தக் குழாய்களின் நலனைப் பேணுவதில் இதன் பங்கு அதிகம்.

உயிர்ச்சத்து: விட்டமின் ஏ, பி, ஈ, சி மற்றும் கே ஆகியவை மாங்கனியில் அதிகமாக உள்ளன. 200 கிராம் மாங்கனியில் விட்டமின் சி 60 மி.கி, பீட்டா கரோட்டின் 1.06 மைக்ரோ கிராம், ஃபோலேட் 71 மைக்ரோ கிராம் அளவில் உள்ளன. இவற்றுடன் லூட்டின், ஜீயாக்சாந்தின் **(Zeaxanthine)** இதில் உள்ளன. இவை மஞ்சள் நிறமிகள் கொண்ட வேதிப் பொருள்களாகும். மாம்பழத்தில் பொட்டாசியம் அதிகமாக இருப்பதால் உயர் ரத்த அழுத்தம் ஏற்படாமல் காக்கும்.

கல்லீரல் பாதுகாப்பு: பாலிஃபினால்கள், பிளாவனாய்டுகள் (8ஆம் பக்கம் பார்க்க...)

வயலும் வயல்சார்ந்த இடமுமான ‘மருதம்’ நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# மாத்தளை ஸாஹிராக் கல்லூரி மாவட்ட குழுநிலை சம்பியனானது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் 17 வயதுக்குட்பட்டோருக்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தில் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி சம்பியனானது.

மாத்தளை ஸாஹிராக் கல்லூரிக்கும் மாத்தளை சிரிமாவோ பண்டாரநாயக கல்லூரிக்கும் இடையே மாத்தளை சென் தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய மாத்தளை ஸாஹிரா கல்லூரி அணி 34.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது

பதிலுக்கு துடுப்பாடிய மாத்தளை சிரிமாவோ பண்டாரநாயக கல்லூரி அணி 47.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 191 பெற்றனர்.

45 ஓட்டங்களால் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மாத்தளை ஸாஹிராக் கல்லூரியானது மாத்தளை சிங்கள பௌத்த கல்லூரி அணி, மாத்தளை கிறிஸ்துதேவ கல்லூரி, மாத்தளை நாவுல ஸ்ரீநாக கல்லூரி ,மாத்தளை கைக்காவல மத்திய கல்லூரி, மாத்தளை ஸ்ரீமாவோ பண்டாரநாயக கல்லூரி என்பவற்றை வெற்றி கொண்டதன் மூலம் மாத்தளை மாவட்ட குழுநிலை சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## பாரதியார் நினைவு நாள் நிகழ்வுகள்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இன்று புதன் ஒன்றுகூடலின்போது பாரதியார் நினைவு நிகழ்வுகள்இடம்பெற்றன.

ஆசிரியமாணவி க.விஜிதா தலைமையில் இடம் பெற்ற இந்திகழ்வுகளில் மானிப்பாய் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக விரவுரையாளர் உதயலதா நவதீசன், பாரதியாரின் பல்பரிமாணம் என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் அதிதி அறிமுகவுரையினை ஆற்றினார். விசேடகல்விநெறி ஆசிரிய மாணவி சப்னா பாரதியாரின் கவிதைத்திறன் என்ற பொருளில் ஆசிரிய மாணவர் உரையை ஆற்றினார்.

கலாசாலை பிரதிஅதிபர் க.செந்தில்குமரன் நிறைவுரையாற்றினார். சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட திருமதி உதயலதா நவதீசன் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

## பார்வை இழப்பைத் தடுக்கும்

என்கிற ஆன்டி ஆக்ஸிடன்ட்களான வேதிப்பொருள்கள் மற்றும் மாஞ்சிஃபெரின் என்கிற ஆக்ஸிஜன் ஏற்றி போன்றவை மாங்கனியில் அதிகம் உள்ளன. இதனால் முதுமையில் வரும் விழித்திரை தேய்ந்து பார்வையற்ற நிலை தடுக்கப் படும். புற்றுநோய் தடுப்பு, நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுதல், கல்லீரல் பாதுகாப்பு போன்றவையும் இதில் உள்ள வேதிப்பொருள்களால் சாத்தியப்படும். மாங்கனியின் நன்மைகள்: மலச்சிக்கலை அகற்றும். இது மென்மையான உணவென்பதால் இரைப்பைப் புண் வராமல் காக்கும். தோல், தலைமுடியைச் செழுமையாக்கி இளமைத் தோற்றத்தைத் தரும். தோல், குடல் புற்றுநோய் வராமல் பாதுகாக்கும். விழித்திரையில் 'மேகுலா' என்கிற முக்கியப் பார்வை நரம்பு முதுமையில் தேய்ந்து, பார்வை இழப்பு ஏற்படுவதைத் தடுக்கும். பெருங்குடலில் தேவையற்ற நோய் உற்பத்திக் கிருமிகள் பெருகாமல் குடல்நலன் காக்கும். கொழுப்பு உடலில் அதிகம் சேராமல் இதயம் காக்கும். அனைத்து விட்டமின் குறைபாடுகளையும் கட்டுக்குள் வைக்கும். ரத்த அழுத்தம் மிகுதியாகாமல் காக்கும்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2024 இல் வெளியிடப்பெற்றது.